# ஈரான் மீதான தாக்குதல் நடவடிக்கைகள் நிறைவு!

## அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மார்கோ ரூபியோ அறிவிப்பு!

ஈரான், மே. 7-

ஈரானுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளை அமெரிக்கா நிறைவு செய்துவிட்டது என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ தெரிவித்தார். அதேவேளையில், ஹார்முஸ் ஜலசந்தியில் கப்பல் போக்குவரத்து மீது ஏதேனும் புதிய தாக்குதல்கள் நடத்தப்பட்டால், அதற்கு “பேரழிவை ஏற்படுத்தும்” பதிலடியை கொடுக்க தயாராக இருப்பதாக அமெரிக்கா எச்சரித்துள்ளது.

முக்கியமான நீர்வழியில் ஏற்பட்ட மோதல்கள், போர் நிறுத்தத்தை சீர்குலைக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்திய நிலையில், உத்தரவிடப்பட்டால்போர்நடவடிக்கைகளை மீண்டும் தொடங்க அமெரிக்க படைகள் தயாராக இருப்பதாக அமெரிக்காவின் உயர்மட்ட இராணுவ அதிகாரி கூறியதை தொடர்ந்து ரூபியோ இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

முக்கியமான வர்த்தக பாதையில் தொடர்ச்சியான தாக்குதல்கள் நடந்ததை தொடர்ந்து, ஈரான் “இன்னும் தொடங்கவே இல்லை” என்று அந்நாட்டின் தலைமைச் செயலாளர் கூறிய நிலையில், கப்பல்கள் ஜலசந்தி வழியாக அனுமதிக்கப்பட்ட பாதையில் இருந்து விலகினால் “கடுமையான பதிலடி” கொடுக்கப்படும் என ஈரானின் புரட்சிகர பாதுகாப்பு படை கடற்படை எச்சரித்துள்ளது.

ஈரானில் இருந்து வந்த ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்களின் தாக்குதலை இரண்டாவது நாளாக இடைமறித்து வருவதாக ஐக்கிய அரபு அமீரகம் அறிவித்தது. ஆனால், இந்த கூற்றை தெஹ்ரான் முற்றிலும் மறுத்துள்ளது.

## தொடர் விடுமுறை எதிரொலி;

# பரளிக்காடு சூழல் சுற்றுலாவில் 4 நாட்களில் 750 பேர் பங்கேற்பு!

### வனச்சரகர் தகவல்!

காரமடை,மே 7–

காரமடை வனச்சரகத்திற்கு உட்பட்ட பரளிக்காடு பகுதி மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில் பில்லூர் அணைக்கு மிக அருகாமையில் உள்ளது. காரமடை வனத்துறை சார்பில் பரளிக்காடு சூழல் சுற்றுலா பழங்குடியின மக்களின் பங்களிப்புடன் நடத்தப்பட்டு வருகிறது. இயற்கை எழில் நிறைந்த பரளிக்காடு கோவை காந்திபுரத்தில் இருந்து 70 கி.மீ. தொலைவிலும், காரமடையில் இருந்து 30 கிமீ தொலைவிலும் உள்ளது. சனி, ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் அரசு விடுமுறை நாட்களில் பரளிக்காடு சூழல் சுற்றுலாவுக்கு பயணிகள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். இந்த சூழல் சுற்றுலாவில் பங்கேற்க HTTPS://COIMBATOREWILDERNESS.COM/ என்ற இணையதளத்தில் ஆன்லைன் வாயிலாக பதிவு செய்து கட்டணம் செலுத்தி செல்ல வேண்டும்.

இந்த சூழல் சுற்றுலா வில் பங்கேற்கும் சுற்றுலா பயணிகளுக்கு பில்லூர் அணையில் பரிசல் பயணம், பழங்குடியின மக்களின் பாரம்பரியமிக்க 10க்கும் மேற்பட்ட உணவு வகைகள், அத்திக்கடவு ஆற்றில் மூலிகை குளியல், வனப்பகுதியில் நடைப்பயணம், பழங்குடியினர் வாழ்வை பிரதிபலிக்கும் பாரம்பரிய நடனம் என பல்வேறு வகையில் வனத்துறையினர் அதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுக்கின்றனர். பரளிக்காடு, பூச்சமரத்தூர், பில்லூர், நீராடி உட்பட பல்வேறு பழங்குடியின கிராமங்களில் இருந்தும் பரிசல் ஓட்டுநர்கள், மகளிர் சுய உதவிக்குழு பெண்கள் என ஏராளமான பழங்குடியின மக்கள் இந்த சூழல் சுற்றுலா வால் வேலை வாய்ப்பு பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கோடை வெயில் வாட்டி வதைத்து வருகிறது. இதனால் மக்கள் நீர்நிலைகளை நாடி செல்கின்றனர். மேலும், சுற்றுலா தலங்களை நோக்கி மக்கள் படையெடுக்க துவங்கியுள்ளனர். இதனை முன்னிட்டு கடந்த மே 1 ம் தேதி முதல் மே 31ஆம் தேதி வரை தினந்தோறும் பரளிக்காடு சூழல் சுற்றுலா இயங்கும் என காரமடை வனச்சரகர் ஜோசப் ஸ்டாலின் அறிவித்ததை அடுத்து சுற்றுலா பயணிகள் இடையே போதிய வரவேற்பு கிடைத்துள்ளது. இதுகுறித்து காரமடை வனச்சரகர் ஜோசப் ஸ்டாலின் கூறுகையில் தமிழகத்தில் தற்போது பள்ளி, கல்லூரிகளுக்கு தொடர் கோடை விடுமுறை விடப்பட்டுள்ளது.

இதனால் பரளிக்காடு சூழல் சுற்றுலாவிற்கு வரும் சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மேலும், வார இறுதி நாட்களான சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டுமே பரளிக்காடு சூழல் சுற்றுலா இயங்கி வந்ததால் சுற்றுலா பயணிகள் அதனை வார நாட்களிலும் இயக்க கோரிக்கை விடுத்து வந்தனர். இதனை தொடர்ந்து கடந்த மே 1 ம் தேதி முதல் மே 31 ம் தேதி வரை தினம்தோறும் பரளிக்காடு சூழல் சுற்று லாவை நடத்த மாவட்ட வன அலுவலரிடம் அனுமதி பெறப்பட்டது. இதற்காக ஆன்லைனில் கடந்த ஏப்.30 முதல் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் பரளிக்காடு சூழல் சுற்றுலாவுக்கு வருகை தர முன் பதிவு செய்து வந்தனர்.

சுற்றுலாவில் பெரியவர்களுக்கு ரூ.700, 14 வயதிற்கு குறைவான சிறியவர்களுக்கு ரூ.600 கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று தினங்களாக தினம் தோறும் சுமார் 250 பேர் என இதுவரை 750 பேர் வருகை தந்தனர். சுற்றுலா பயணிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி இயற்கையை கண்டு மகிழலாம்” என தெரிவித்தார்.

## சட்டமன்றத் தேர்தல் முடிவு-

# அறிஞர் அண்ணாவும் நமது தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினும்

தி.மு.க. தேர்தலில் போட்டியிட்டு ஆட்சி அமைக்கத் துடிக்கும் வெறும் அரசியல் கட்சி அன்று. தந்தை பெரியாரிடம் இருந்து விலகி திராவிட முன்னேற்றக் கழகத்தை 1949ஆம் ஆண்டில் தொடங்கி, 1957 ஆம் ஆண்டில் தான் சட்டமன்றத் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் முதன் முதலாக தி.மு.க. போட்டியிட்டது.

இடைப்பட்ட 8 ஆண்டுகளில் ஊர்ப் புறம், மாவட்டம், நகர், சென்னை மாநகரம் வரை கட்சியின் அமைப்புகளை உருவாக்கி, மாவட்டந்தோறும் மாநாடுகளை நடத்தி, பகுத்தறிவு, சமூக நீதி, உலகின் பல நாடுகளில் முகிழ்த்த புரட்சிகளை இளைஞர்களுக்குக் கற்பித்துப் பக்குவப்படுத்தி, அதற்குப் பின்னர் தான் தேர்தல் அரசியலுக்கு தி.மு.க. நுழைந்தது.

இந்திய அரசியலில் எந்தக் கட்சியிலும் காண முடியாத தனிச்சிறப்பாகும்.

1957 ஆம் ஆண்டில் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள், அறிஞர் அண்ணா, கலைஞர், பேராசிரியர் உட்பட 15 சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

எங்கெல்லாம்சமூக நீதி கொள்கைக்கு ஆபத்து ஏற்பட்டதோ அங்கெல்லாம் கட்சி அரசியல் கடந்து அறிஞர் அண்ணா ஒரு பொதுக் கருத்து உருவாவதற்குப் புதிய அரசியல் அணுகுமுறையைப் பின்பற்றினார்.

1954 ஆம் ஆண்டில் குலக்கல்வி முறையை அன்றைய முதல்வர் இராஜாஜி நடைமுறைப்படுத்த முற்பட்டபோது, தந்தை பெரியார் கடுமையான முறையில் எதிர்த்தார்.

காங்கிரஸ் கட்சியில் தலைவர் காமராசர் போன்றவர்களும் எதிர்த்த நிலையில் ஆட்சிப் பொறுப்பிலிருந்து இராஜாஜி விலகினார். அப்போது சட்டமன்றத்திற்குக் குடியாத்தம் தொகுதியில் காமராசர் போட்டியிட்டார்.

வருங்கால அரசியலில் தி.மு.க.விற்கு எதிராக காமராசர் செயல்படுவார் என்பதை அறிந்தும், குடியாத்தம் தேர்தலில் காமராசர் வெற்றி பெறுவதற்கு அறிஞர் அண்ணா துணை நின்றார். ‘குணாளா ! குலக்கொழுந்தே’ என்று பாராட்டி காமராசரைச் சிறப்பித்தார் அறிஞர் அண்ணா.

காமராசர் முதல்வராக இருந்தபோது 1962 ஆம் தேர்தலில் அறிஞர் அண்ணாவைக் காஞ்சிபுரம் தொகுதியில் தோற்கடிக்க முழுக் கவனம் செலுத்தினார். தோற்கடித்தார். தி.மு.க. 50 சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்றது. அறிஞர் அண்ணாவின் தோல்வியைக் கண்டு தி.மு.க. தொண்டர்கள் முதல் அனைத்துத் தலைவர்களும் கலங்கினர். தேர்தல் முடிவு தெரிந்தவுடன் அறிஞர் அண்ணா பெங்களூர் சென்றார். அங்கிருந்து “அறுவடையும் அணிவகுப்பும்” என்ற தலைப்பில் மூன்று மடல்களைத் திராவிட நாடு ஏட்டில் எழுதினார்.

“பெங்களூர் நகரில் ஜெய் நகர் என்ற பகுதியில், ஜெய விலாஸ் என்ற இல்லத்தில் தங்கியிருந்துவிட்டு வருகிறேன். வேடிக்கை அல்ல, தம்பி! விசித்திரம், ஆனால் உண்மை!

தோல்வி கிடைத்ததும் நான் சென்று தங்கியிருந்த இடம் ஜெய விலாஸ் ஜெய் நகர்! போதுமா விசித்திரம்! என்ன செய்து கொண்டிருந்தேன்?

பலரும் வந்திருந்து எனக்கு ஆறுதல் கூற, அதைக் கேட்டுத் துயரத்தைத் துடைத்துக் கொண்டு மன அமைதி பெற்றுக் கொண்டிருந்தேன் போலும் என்று எண்ணுகிறாய். அது தான் இல்லை! பலருக்கு ஆறுதல் கூறிக் கொண்டிருந்தேன்.” “அரசியல் உலகு, அற்புதங்கள், அதிர்ச்சிகள், மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சிகள், எக்களிப்புகள், எரிச்சலூட்டும் சம்பவங்கள், வெற்றிகள், தோல்விகள் யாவும் நிரம்பிய இடம்.

எல்லாத் துறைகளிலும் அவ்விதம் என்பாய். ஒரு மாறுபாடு உண்டு. மற்ற எந்தத் துறையினையும் விட அரசியல் துறையிலே எதிர்பாராத நிகழ்ச்சிகள், ஏமாற்றங்கள், எரிச்சல்கள் நிரம்ப ஏற்படும்; விசித்திரமான உலகு.” இம்மடலின் மற்றொரு பகுதியில் அறிஞர் அண்ணா, “தம்பி கருணாநிதி கடற்கரைக் கூட்டத்திலே சுட்டிக் காட்டியது போல, அந்தத் தோல்வியால் மூண்டிடும் வேதனை, புதிய உறுதியுடன் பணியாற்றி, இப்போது பெற்ற வெற்றியினை விட அளவிலும் வகையிலும் தரம் உள்ளதான வெற்றியைப் பெற்றளிக்கும் ஆற்றலை நமக்குத் தருவதாக அமைய வேண்டும்.” என்று அறிஞர் அண்ணா வலியுறுத்துகிறார்.

அறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் கொள்கை வாரிசாக இருந்து, எதிர்காலத் தமிழ்நாட்டின் நம்பிக்கை ஒளியாக வலம் வரும் திராவிட இயக்க அரிமா முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் ஒவ்வொரு நகர்விலும் இத்தகைய அரிய குணநலன்களைக் காணமுடிகிறது.

எங்கள் வீட்டு இல்லத் திருமண நிகழ்ச்சியில் சில ஆண்டுகளுக்கு முன்பு தலைவர் ஸ்டாலின் ஒரு கருத்தை வெளியிட்டார். “நான் பிறந்தவுடன் அப்பா கலைஞர், பெரியார், அண்ணா பெயர்களை இணைத்து “அய்யா துரை” என்று தான் பெயரிட்டார். அப்போது சோவியத் ஒன்றியத்தின் தனிப்பெரும் தலைவர் ஸ்டாலின் மறைவு செய்தியை அறிந்து எனக்கு ஸ்டாலின் என்று பெயரை மாற்றி விட்டார் என்று குறிப்பிட்டார்.

கடந்த 5 ஆண்டு ஆட்சியில் எடுத்துக்காட்டான பொருளாதார உயர் வளர்ச்சியும், அதன் விளைவாக எந்த மாநிலமும் கண்டிராத ஏழை எளிய மக்களின் வாழ்க்கையில் ஏற்றமும் முன்னேற்றமும் ஏற்பட்டன என்பதை ஒன்றிய அரசே ஒப்புக் கொண்டது.

பெரியாரின் தன்மானத்தையும் சுயமரியாதையையும், அறிஞர் அண்ணாவின் ஆற்றலையும் அணுகுமுறையையும், சோவியத் ஜோசப் ஸ்டாலினின் கொள்கை உறுதியும் பெற்ற, தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இந்திய அளவில் பாசிச எதிர்ப்பு அணியின் முன்னணி செயல் வீரராகச் சீரிய முறையில் பணியாற்றி ஜனநாயகம் காப்பார்!

பல தேர்தல் வெற்றிகளைக் குவிப்பார்!



**பேராசிரியர்.மு.நாகநாதன்**



**சிலர் வெளியேறும் வேளையில்**

**நீ**
**உள்நுழைந்து இருக்கிறாய்!**

**கோடை வெயில் கொளுத்துகிறது**
**வெளியே....**

**குளிர் நிலவாய்க் கூட வந்து நிற்கிறாய் நீ!**

**அற்ற குளத்து அறுநீர்ப் பறவையில்லை!**

**உற்ற நண்பர்கள் உடன் இருக்கும் வேளை இது!**

**நீங்கள் வந்து பார்த்தது எங்கள் தலைவரை மட்டுமில்லை...**

**அவர் அன்பில் கரைந்திருக்கும்**

**எம் போன்ற கோடான கோடி உடன்பிறப்புகளை!**

**சந்தித்துக் கொண்டது வெறும் நிகழ்வுதான்!**

**ஆனால்**

**வந்து சந்தித்த நேரம்**

**வரலாறாய் அதனை ஆக்கியிருக்கிறது!**



**பேராசிரியர் சுப.வீரபாண்டியன்**
தலைவர்,
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

# 3 ரயில்வே திட்டங்களை செயல்படுத்த ஒன்றிய அரசு ஒப்புதல்!

*புதுடெல்லி, மே 7 -*

*மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், உத்தர பிரதேசம், கர்நாடகா, ஆந்திர பிரதேசம் மற்றும் தெலங்கானா ஆகிய மாநிலங்களில் ரூ.23,437 கோடி மதிப்பிலான மூன்று ரயில்வே திட்டங்களை செயல்படுத்த ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.*

*இதன் மூலம் இந்திய ரெயில்வேயின் தற்போதைய ரெயில் பாதை வலையமைப்பு 901 கிலோமீட்டர்களாக அதிகரிக்கப்படுகிறது.*

*இந்த திட்டங்களில் நாக்டாமதுரா 3ஆவது மற்றும் 4ஆவது வழித்தடம், குண்டக்கல்வாடி 3ஆவது மற்றும் 4ஆவது வழித்தடம் மற்றும் புர்வால் சீதாபூர் 3ஆவது மற்றும் 4ஆவது வழித்தடம் ஆகியவை அடங்கும். மேலும் இவை 203031ஆம் ஆண்டுக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*அதிகாரப்பூர்வ அறிக்கையின்படி, முன்மொழியப்பட்ட இந்த திட்டமானது, சுமார் 83 லட்சம் மக்கள் தொகை கொண்ட 4,161 கிராமங்களுக்கான இணைப்பை மேம்படுத்தும்.*

*இந்தத் திட்டம் மகாகாலேஷ்வர், ரந்தம்பூர் தேசிய பூங்கா, குனோ தேசிய பூங்கா, கியோலாடியோ தேசிய பூங்கா, மதுரா, விருந்தாவன், மந்த்ராலயம் (ஸ்ரீ ராகவேந்திர சுவாமி மடம்), ஸ்ரீ நெட்டிகண்டி ஆஞ்சநேய சுவாமி வாரி கோயில் (காசபுரம்), ஷ்யாம்ஸ்யநாத் கோயில் (காசபுரம்), ஷியாம்சரா கோயில் போன்ற பல முக்கிய சுற்றுலா தலங்களுக்கு ரயில் இணைப்பை மேம்படுத்தும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.*

*நிலக்கரி, உணவு தானியங்கள், சிமெண்ட், பெட்ரோலிய பொருட்கள், இரும்பு மற்றும் எஃகு, இரும்பு தாது, கொள்கலன்கள், உரங்கள் போன்ற பொருட்களை கொண்டு செல்வதற்கும் இவை இன்றியமையாத வழித்தடங்களாக உள்ளன.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பழ. மணி
### மே 7 (2017)



**இளமைக் காலம் முதல் தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டவர்.**

**மன்னார்குடி நகர துணைச் செயலாளர், நகரச் செயலாளர், கீழத்தஞ்சை மாவட்டப் பொருளாளர், மாவட்ட துணைச் செயலாளர் ஆகிய பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**மன்னை நகராட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, நகர மக்களின் நன்மதிப்பை பெற்றவர். மன்னை நகர கூட்டுறவு வங்கித் தலைவர், தமிழ்நாடு அரசு பயிர் காப்பீட்டு ஆலோசனைக்குழு உறுப்பினர் ஆகிய பதவி வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். கழகப் பணியாற்றுவதில் மாவீரர் என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**